ஜீ.எஸ்.எம்.பீ.ரெக்னிகல் சர்விசஸ் (பிறைவட்) கம்பனி - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஜீ.எஸ்.எம்.பீ.ரெக்னிகல் சர்விசஸ் (பிறைவட்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானம் மற்றும் பிடித்துவைக்கப்பட்ட வருவாய் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந் தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந் து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந் தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்பு டைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்று ம் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்ட ால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந் தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்று ம் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்க ள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்..

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்று ம் எனது அபிப்பிராயம் உள்ளடக்க ப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்க ளின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளு ம் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்க ளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்ட மிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வ தற்கும் போதுமான மற்று ம் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்க ளினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத்

தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டு ப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டு ப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை ககளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்று ம் முகாமைத்துவத்தால் மேற்கொள்ள ப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந் தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்று ம் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ள ப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்க ப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச் சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்ட மைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்று ம் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டு ப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்று ம் உரிய சட்டங்கள் மற்று ம் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெற வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கம்பனி வழங்கிய சேவைகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய ரூபா 39,608,296 மீதியினுள், 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த மொத்தம் ரூபா 5,131,827 ஆன 24 மீதிகள் மற்றும் 5-10 ஆண்டுகளாக இருந்த மொத்தம் ரூபா 14,643,151 ஆன 36 மீதிகள் காணப்பட்டன. இந்த மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு 2025 மார்ச் 31 வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இங்கு அடங்கிய 05 ஆண்டுகளுக்கு முன்பு கடன்பட்டோர் மீதிகள் கணக்குகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	பெற வேண்டிய மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கம்பனியால் வழங்கப்படுகின்ற சேவைகளைப் பெறுவதற்காக 2010-2024 காலப்பகுதினுள் மொத்தம் ரூபா 26,736,993 ஆன முற்பணங்கள் 259 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தன. அதில், 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 4,231,495 ஆன 108 முற்பண மீதிகள், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை .	05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முற்பணத் தொகைகளை கம்பனியின் வருமானமாக இனங்காண்பதற்கான கொள்கையை 2024 செப்டெம்பர் மாதம் பணிப்பாளர் சபை அங்கீகரித்த போதிலும், அதன் எழுத்திலான திருத்தப்பட்ட உறுதிப்படுத்தல் (Minutes) 2025 மார்ச் மாதம் கிடைத்தது. அதன்படி, இயைபான சீராக்கங்கள் 2025 நிதியாண்டிலிருந்து முன்னுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் படி செயலாற்றப்படும்.	முற்பண மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) கம்பனியின் அகவிதி			
(i) பிரிவு 12	இலங்கையில் அல்லது வேறு இடங்களில் உள்ள புதிய மற்றும் ஏற்கனவே உள்ள கனியம் தொடர்பான கைத்தொழில்களுக்கு இற்றைவரைப்படுத்தப்பட்ட புவிச்சரிதவியல்சார் தரவுகள் மற்றும் தகவல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அந்த நோக்கத்திற்காக தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கையின் வேறு இடங்களில் உள்ள தற்போதைய மற்றும் புதிய கனியம் தொடர்பான கைத்தொழில்களுக்கு இற்றைவரைப்படுத்தப்பட்ட புவிச்சரிதவியல்சார் தரவுகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்காக தரவு முறைமையொன்றை தயாரித்தல் எனும் பிரிவை அகவிதியின்படி எய்துவதற்காக கம்பனி அலுவலர்களை விழிப்பூட்டுதல் அல்லது செயல்பாடு எதுவும் கம்பனியின் உயர் முகாமைத்துவம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை என்பதுடன் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டின் போதேனும் இந்த பிரிவுகளின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை.	கம்பனியின் அகவிதியில் அடங்கிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை கம்பனி மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ii) பிரிவு 13	இலங்கையில் அல்லது வேறு இடத்தில் கனியம் தொடர்பான புதிய மற்றும் ஏற்கனவே உள்ள கைத்தொழில்கள்	உரிய ஆண்டினுள் கனியம் சார்ந்த பதப்படுத்துதல், உற்பத்தி அல்லது பெறுமதி சேர்த்தல் பொருட்டு ஆலோசனை பெறுவதற்கு சேவைபெறுநர் எவரும்	கம்பனியின் அகவிதியில் அடங்கிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை

		பொருட்டு பதப்படுத்துதல், உற்பத்தி செய்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முன்வராமையினால், கம்பனி அத்தகைய சேவைகளை செயற்படுத்தவில்லை.	கம்பனி மேற்கொள்ளுதல் வேண்டும்.
	(iii) பிரிவு16	இலங்கையில் அல்லது வேறு இடத்தில் உள்ள கைத்தொழில்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பொருத்தமான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை .	கம்பனியின் அகவிதியினுள் பணிப்பாளர் சபையின் அமைப்பு, அதன் சமமானநிலை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான அவதானிப்புகள் மற்றும் பிழைதிருத்தங்கள் முன்வைக்கப்படாத பின்னணியில், மேற்கூறிய கம்பனியின் அகவிதியில் நிறுவன செயல்பாடுகளின் வகிபாகம் பற்றி மட்டும் அவதானிப்புகளை வழங்குவது நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது.	கம்பனியின் அகவிதியில் அடங்கிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை கம்பனி மேற்கொள்ளுதல் வேண்டும்.
ஆ)	2023 செப்டம்பர் 27 ஆம் திகதிய 01/2021(ii) ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின் பந்தி 3.8	ஒவ்வொரு கட்டுப்படுத்தப்பட்ட கம்பனியும், தாய் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகரித்த நிர்வாக மற்றும் நிதி கையேட்டை அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் துறையின்	வரைவுசெய்யப்பட்ட மனிதவள மற்றும் நிர்வாக செயல்பாடுகள் கையேடு 2025 மார்ச் 21 ஆம் திகதி நிறுவனத்தின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனை மீளாய்வு செய்வதற்காக மனிதவள முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு தவிசாளர் குறிப்பொன்றை	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்வாக மற்றும் நிதி கையேட்டை தயாரித்து தேவையான அங்கீகாரத்தை பெறுதல் வேண்டும்.

ஒருப்பாட்டுடன் தயாரிக்க வேண்டிய போதிலும், அக்கம்பனி அத்தகைய கையேட்டைத் தயாரித்திருக்கவில்லை.	இட்டுள்ளார். தற்போது இந்தக் குழுவால் கலந்துரையாடப்பட வேண்டிய சில விடயங்கள் இருப்பதால், வரைவுசெய்யப்பட்ட இந்த மனிதவள முகாமைத்துவக் கையேட்டையும் இயைபான குழுவிற்கு சமர்ப்பித்து அதன்பின்னர் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 86,562,911 இலாபம் ஆக இருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 122,969,619 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 36,406,708 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய செயல்பாடல்லாத வருமானம் ரூபா 39,469,639 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக விளங்கியது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சிறப்பு கருத்திட்டங்கள் பிரிவின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் ரூபா 9,103,617 நிதிசார் நட்டத்தை பெற்றிருந்ததுடன், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிலும் முறையே ரூபா 5,579,669, ரூபா 8,552,276 மற்றும் ரூபா 6,265,173 நிதிசார் நட்டங்களை பெற்றிருந்தன. இருப்பினும், இந்த நிலமையைத் தடுப்பதற்கு எவ்வித வேலைத்திட்டமும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் சிறப்புத் கருத்திட்டங்கள் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் உரிமங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வந்தன என்பதுடன் இதன் காரணமாக, சிறப்புத் கருத்திட்டங்கள் பிரிவு 2024 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ஈட்டுவதற்கு முடியவில்லை. சிறப்புத் திட்டங்கள் பிரிவால் செயற்படுத்தப்படுகின்ற முக்கிய கருத்திட்டங்களான கந்தளாய் மணல் அகழ்வுக் கருத்திட்டம் மற்றும் கொட்டிகம்பொக்க படிகக்கல் கருத்திட்டம் ஆகியவற்றிற்கு அரச நிறுவனங்களிடமிருந்து தேவையான அங்கீகாரங்களைப் பெறுவதில்	நிதிசார் நட்டங்களை தடுப்பதற்கு வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டும்.

		ஏற்பட்ட தாமதம் காரணமாக, இரண்டு கருத்திட்டங்களையும் தொடங்க முடியவில்லை.	
(ஆ)	கேகாலை மாவட்டத்தின் பதமுரே கிராம அலுவலர் பிரிவிற்குச் சொந்தமான மா ஓயா மணல் அகழ்வு கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டிருந்ததுடன், இதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருந்து இரண்டு அகழ்வு உரிமங்கள் பெறப்பட்டிருந்தன. குறித்த உரிமங்களின் கீழ் கிட்டத்தட்ட 375 கியுப் மணல் அகழ்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அதில் 6 சதவீதம் அதாவது 24 கியுப் மணல் மட்டுமே அகழ்வு செய்யப்பட்டிருந்தது. அகழ்வுத் தொழிலாளர்களைத் தேடிக்கொள்வதில் உள்ள சிரமம் காரணமாக, இந்தக் கருத்திட்டத்தின் பணிகளை 2025 சனவரி 07 ஆம் திகதியன்று நிறுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன், சரியான திட்டமிடல் இல்லாமல் வேலை செய்தமையினால், இந்தக் கருத்திட்டம் ஒட்டுமொத்தம் ரூபா 988,426 நிதி நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.	கருத்திட்டத்தை தொடங்கும்போது நிலவிய பிரச்சினைக்குரிய நிலமையின் அடிப்படையில் இக்கருத்திட்டத்தில் ஏற்கனவே நட்டம் ஏற்பட்டிருந்தாலும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முறையியலின்படி, இந்தக் கருத்திட்டத்தை மிக விரைவில் இலாபமீட்டும் கருத்திட்டமாக செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த முறையியலின் கீழ், ஒவ்வொரு பாதைக்கும் குவிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச கியுப் அளவுகளை அவர் குவிக்கத் தவறினால், அதற்கு ஏற்புடையவாறு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி எங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை அவர் செலுத்த வேண்டும்.	கருத்திட்டங்களை முறையான சாத்தியவள ஆய்வின்படி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், கருத்திட்டத்தை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவர வேண்டும்.
(இ)	கந்தளாய் சிறிமங்கலபுர மணல் விற்பனை நிலையம் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்தாலும், இந்தக் கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பணியினை கம்பனி தொடங்கத் தவறியதன் பின்னணியில், கருத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு பணிப்பாளர் சபை 2024 சனவரி 26 ஆம் திகதி முடிவுசெய்திருந்தது. கருத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்களின் சம்பளம், போக்குவரத்து செலவுகள் மற்றும் தங்குமிட செலவுகள் என்பன பொருட்டு செலுத்தப்பட்ட ரூபா 1,765,917 ஒட்டுமொத்த செலவும்	அரச நிறுவனங்கள் கருத்திட்டத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைத் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கருத்திட்டத்தைத் தொடங்க முடியாமை தொடர்பிலான விடயங்கள் 2024 சனவரி 26 ஆம் திகதி பணிப்பாளர் சபையிடம் அறிக்கையிடப்பட்டதன் பிற்பாடு, கருத்திட்டத்தின் செயல்பாடுகளை நிறுத்துவதற்கு பணிப்பாளர் சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. கருத்திட்டத்திற்குத் தேவையான அலுவலர்கள் நிறுவனத்தின் பதவியினர் ஊடாகவே இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுள்ளமையினால்,	முறையான சாத்தியவள ஆய்வு மற்றும் தேவையான சட்டப் கட்டமைப்பு தயாரிக்கப்பட்ட பின்னரே கருத்திட்டங்களை தொடங்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு உரிய திட்டமிடல் இன்றி உறப்படும் செலவுகள் தொடர்பாக அலுவலர்கள் பொறுப்பேற்க

	பயனற்று இருந்தது.	சம்பளம் மற்றும் வேதனங்களுக்கு மேலதிக செலவு எதுவும் உறப்படவில்லை என்பதுடன், கருத்திட்டம் பொருட்டு தங்குமிடம் மற்றும் பிற செலவுகளுக்காக அண்ணவளவாக ரூபா 288,227 தொகை உறப்பட்டிருந்தது. வெற்றிகரமான அல்லது வெற்றிகரமற்ற ஏதேனும் கருத்திட்டம் பொருட்டு ஆரம்ப மேற்பார்வை மற்றும் வெளிக்கள ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் வசதிகளுக்காக ஏதேனும் செலவு உறப்பட வேண்டியுள்ளது. அதன்படி, இந்தக் கருத்திட்டத்திற்கும் அதிக செலவு உறப்பட்டுள்ளது.	வேண்டும்.
(ஈ)	திருகோணமலையின் பரைபஞ்சும் பிரதேசத்தில் 2020 ஆம் ஆண்டில் கம்பனியால் தொடங்கப்பட்ட மூதூர் மணல் அகழ்வுக் கருத்திட்டம் தொடர்ந்தும் நட்டமடையும் நிலமை காணப்பட்டதன் காரணமாக கருத்திட்டத்தின் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்தபோதிலும், இந்தக் கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டிலேயே கருத்திட்டத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன என்பதுடன், அதற்காக 2024 யூலை 25 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதினுள் இந்தக் கருத்திட்டம் ஒட்டுமொத்தமாக ரூபா 8,058,807 நிதி நட்டத்தை அடைந்திருந்தது.	மூதூர் மணல் அகழ்வுக் கருத்திட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் எமது நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, புவிச்சரிதவியல் அளவீட்டு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அதேபோன்று சுற்றாடல் அமைச்சினாலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன், சுற்றாடல் அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையும் தற்போது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த மணல் அகழ்வுத் கருத்திட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள வெல்லநாவல் பிரதேசத்தில் உள்ள ஒரு பாலம் சாய்ந்தமையினால், உரிமம் வழங்கும் நடவடிக்கை புவிச்சரிதவியல் அளவீட்டு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் இடைநிறுத்தப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி இந்தக் கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.	கருத்திட்டத்தின் செயற்பாடுகளை முறையாகவும், வினைத்திறனாகவும், பயனுறுவாகவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கம்பனியால் செற்படுத்தப்பட்ட யக்கல மணல் விற்பனை நிலையத்துக்கு ஏற்புடையதாக 2024	கம்பனியால் செற்படுத்தப்பட்ட யக்கல மணல் தொடர்பாக, தற்போது யக்கல மணல் தளத்தின்	முறையான விற்பனைத் திட்டத்தை

	ஆம் ஆண்டில் மணல் விற்பனை எதுவும் செய்யப்படவில்லை என்பதுடன், மீளாய்வாண்டில் குறித்த நிலையத்திற்கான ரூபா 974,132 செலவு மட்டும் பயனற்று இருந்தது.	செயல்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் புதிய முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இந்த மணல் தளம் அமைந்துள்ள யக்கல காணியின் உரிமை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு கைமாற்றும்போது ஏற்பட்ட சிக்கல் காரணமாக, களஞ்சிய உரிமத்தை புதுப்பிக்க முடியவில்லை.	தயாரித்து விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் புதிய நகர மணல் விற்பனை நிலையம் ரூபா 2,146,347 நிதி நட்டத்தை பதிவுசெய்திருந்தது. அத்துடன், 2022 ஆம் ஆண்டிலிருந்து ஓர் ஊழியர் மட்டும் இணைக்கப்பட்டிருந்த இந்த நிலையத்திற்கு மீளாய்வாண்டின் ஒக்டோபர் மாதத்திலிருந்து 06 மேலதிக ஊழியர்கள் இணைக்கப்ப ட்டதன் காரணமாக கருத்திட்டச் செலவு ரூபா 922,949 ஆல் அதிகரித்திருந்தது.	2025 ஆம் ஆண்டில் குறித்த கருத்திட்டத்தை இலாபமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்குத் தேவையான மூலோபாயத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இக்கருத்தட்டம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 387,613 நட்டத்தை பதிவுசெய்திருந்ததுடன், கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட ரூபா 2,146,346 வரையான அதிகநட்டம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் யாதெனில், கருத்திட்டத்தின் வருகையை அடையாளப்படுத்தும் வகையில் தொடர்ப ில்லாத மேலதிக அலுவர்க ள் குழுவொன்று கருத்திட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததே ஆகும்.	மணல் விற்பனை நிலையத்தில் விற்பனையை மேம்படுத்துவதற்கு த் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் மேலதிக ஊழியர்களை ஈடுபடுத்தாமல் இருப்பதற்குகம்பனி பொறுப்புக்கூறவும் வேண்டும். அத்துடன், கருத்திட்டத்துடன் தொடர்பில்லாத மேலதிக அலுவலர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2017 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கொட்டிகம்பொக்க படிகக்கல் படிவு அகழ்வுக் கருத்திட்டத்தின் பணிகள்	இந்த கருத்திட்டம் தொடர்பான ஆரம்ப பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனம் பணத்தை செலவிட்டிருந்ததுடன், அதற்கு ஏற்புடையதாக இந்தக்	கருத்திட்டத்தின் பணிகளை உடனடியாக தொடங்குவதற்கு தேவையான

2025 ஏப்றல் 07ஆம் திகதியளவிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நிர்வாகச் செலவுகள், அளவை நடவடிக்கைகள், நிலையான சொத்துக்களை கொள்வனவுசெய்தல், ஊழியர் சம்பளம் செலுத்தல் மற்றும் ஆலோசனை கொடுப்பனவுகள் என்பன பொருட்டு 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 27,865,149 பயன்பாடின்றி உறப்பட்டிருந்தது.	கருத்திட்டம் சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அமைச்சரவையின் முடிவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் வழங்கிய பரிந்துரைகளின்படி எதிர்கால நடவடிக்கைகள் நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளன.	ஏற்பாடுகளை நிறுவனம் செய்துகொள்ளல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கந்தளாய் சூரியபுர தும்மோதர மணல் கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக, 2022ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் இறுதியில், கருத்திட்டத்திற்குப் பொறுப்பான அகழ்வுப் பொறியியலாளரினதும் மணல் களஞ்சியப்படுத்தும் தளத்திற்குப் பொறுப்பான வெளிக்கள பரிசோதகரினதும் அறிக்கையின்படி, 3658 கியுப் மணல் களஞ்சியத்தில் பௌதிகரீதியாக இருப்பது உறுதி செய்யப்பட்ட போதிலும், அந்த அளவு மணல் இருப்பு பௌதிகரீதியாக இல்லை என கணக்காய்வு சோதனையின்போது தெரியவந்தது. இது தொடர்பாக, 2024 மே 07 ஆம் திகதி விசாரணை அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கையில், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்காமல், கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பேரில் ரூபா 10,603,916 மணல் இருப்பின் பெறுமதி புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் கருத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து கருத்திட்ட	கந்தளாய் சூரியபுரத்தில் மணல் தட்டுப்பாடு குறித்து அமைச்சு விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளதுடன், அந்தக் குழு காணாமற்போன மணல் கியுப் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் ஊடாக வழங்கியுள்ளது. அந்த அறிக்கை பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தில் பணியாற்றிய ஊழியர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	மணல் தட்டுப்பாடு சம்பந்தமான விசாரணையை உடனடியாக முடித்து, பொறுப்பான தரப்பினர்களை அடையாளம் காண்பதற்கு கம்பனி எடுக்க வேண்டும் என்பதுடன் அதன் மூலம் நட்டத்தை ஈடுசெய்து கொள்ள வேண்டும்.

	முகாமையாளராகப் பணியாற்றிய அகழ்வுப் பொறியியலாளர் 2024 மே 06 ஆம் திகதி சமர்ப்பித்த பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கு ரூபா 191,187 பணிக்கொடை கொடுப்பனவும் 2024 யூன் 14 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.		
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் இருந்த ரூபா 5,124,774 நுகர்வோர் பொருள் இருப்பு மற்றும் ரூபா 40,445 ஆன நிவ் டவுன் மணல் விற்பனை நிலையத்தின் இருப்பு என்பன தொடர்பாக பௌதிக இருப்பு அளவீடுகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்குப் பிரிவுக்கு மாதாந்தம் அனுப்பப்படும் இருப்பு அறிக்கைகள், பௌதிக இருப்பு அடிப்படையில் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் கணக்கிடப்படும் என்று ஊகிக்கப்படுகிறது. அத்துடன், விசேட மணல் இருப்பு கணிப்புகள் தொடர்ந்து செய்யப்பட வேண்டுமானால், அதனை கணக்காய்வுப் பிரிவால் எழுத்துமூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதுடன், இருப்பு எண்ணுவதற்கான செலவு மற்றும் நேரம் குறித்து அவர்கள் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் செயற்படுத்த முடியும்.	கம்பனி பௌதிக இருப்பு மெய்மையாய்வுகளை ஏற்புடையவாறு மேற்கொள்ள வேண்டும்.
(இ)	2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் காணாமல் போன ரூபா 671,650 பெறுமதியான நிலையான சொத்து 02 விடயங்கள் தொடர்பான விசாரணைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.	காணாமற்போன நிலையான சொத்துக்கள் தொடர்பாக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதுடன் இறுதிப் பரிந்துரைகள் கணக்குப் பிரிவிற்கு இன்னும் கிடைக்கவில்லை.	உரிய விசாரணைகளை உடனடியாக முடித்து, பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டங்களை அறவிட்டுக் கொள்ள, வேண்டும்.
(ஈ)	2014--2020 காலப்பகுதினுள் ரூபா 522,555 பெறுமதியான 43 டோனர்கள் கொள்வனவு செய்யப்பட்டாலும், அவற்றிக்குரிய அச்சுப்பொறிகள் நிறுவனத்தில் இல்லாமையினால், மீளாய்வாண்டின் இறுதியளவில் குறித்த டோனர்கள் காலம் கடந்த இருப்புகளாக அடையாளம் காணப்பட்டிருந்தன.	ரூபா 522,555 பெறுமதியான 50 Toner மற்றும் Cartridges அவற்றிக்குரிய அச்சுப்பொறிகள் நிறுவனத்தில் இல்லாமை மற்றும் வேறு சில பழுதுபார்க்க முடியாமை என முடிவுசெய்ததன் பிற்பாடு பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தமை காரணமாக, இருப்பு ஆக களஞ்சியத்தில் பேணப்பட்டுள்ளன. இந்த இருப்பு எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படவுள்ள ஏதேனும்	தேவையற்ற கொள்வனவுகளுக்கு பொறுப்பான அலுவலர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		அச்சுப்பொறி/பொறிகள் பொருட்டு பயன்படுத்த முடியுமா என்பதுபற்றிய நிச்சயமற்ற தன்மை இருந்ததுடன், சிறிது காலமாகப் பயன்படுத்தப்படாமையினால் இதுபற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டதன் பிற்பாடு, பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் ஆய்வு செய்யப்பட்டதன் பிற்பாடு விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.	
(உ)	புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் பணிபுரியும் அகழ்வுப் பொறியாளர்களுக்கான தொழில்முறை கொடுப்பனவுக்காக வழங்கப்பட்டிருந்த ஆம் இலக்க அப/14/0385/527/009 மற்றும் 2014 மே 29 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில், கம்பனியும் 2024 பெப்ரவரி முதல் திசெம்பர் வரை கம்பனியில் பணிபுரியும் அகழ்வுப் பொறியியலாளர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 2,189,292 தொழிற்றுறை கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.	புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் பணிபுரியும் பொறியியலாளர்களுக்கு பொறியியல் கொடுப்பனவை வழங்குவதற்கு சூழல் மற்றும் புதுப்பிக்கத்தகு எரிசக்தி அமைச்சரால் 2024 மார்ச் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின்மூலம் முன்மொழியப்பட்டது. இந்தக் கொடுப்பனவைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவை 2014 மே 29 ஆம் திகதி அங்கீகாரம் அளித்தது. அதன்படி, கம்பியின் அகழ்வுப் பொறியியலாளர்களின் விசேட தொழிற்றுறை பங்களிப்பு பொருட்டு 185ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தாய் கம்பனியின்படி உரிய கொடுப்பனவை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.	பணியகத்திலிருந்து தனியான சட்டப்பூர்வ கூறு ஒன்றாக தாபிக்கப்பட்டிருந்த இந்த கம்பனிக்கு குறித்த அமைச்சரவை தீர்மானத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியாமையினால் செலுத்தப்பட்ட தொழிற்றுறை கொடுப்பனவை மீள அறவிட்டுக் கொள்ள வேண்டும்.
(ஊ)	2014 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முதூர் பறைப்பஞ்ஞும் மற்றும் முல்லைத்தீவு பரல் கருத்திட்டங்களுக்காக மாவட்ட வன அலுவலகத்துக்கு வைப்புத்தொகையாக செலுத்தப்பட்ட ரூபா 680,000 ஐ விடுவிக்கவும், 2013 - 2015 க்கும் இடையிலான காலப்பகுதியில் லொறி வண்டிகளுக்கு வைப்புத்தொகையாக நிறுவனம் பெற்ற ரூபா 648,000 ஐ கொடுத்துதீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முதூர் பறைப்பஞ்ஞும கருத்திட்டத்திற்காக மாவட்ட வன அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை விடுவிக்குமாறு 2024 நவம்பர் 20 ஆம் திகதியன்று திருகோணமலை மாவட்ட வன அலுவலருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு இதுவரையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. முல்லைத்தீவு பரல் கருத்திட்டம் தொடர்புடைய ரூபா 400,000 வைப்புத் தொகையை விடுவிக்குமாறு எழுத்துமூல அறிவிப்புகள் தொடர்ந்து	வைப்புத்தொகையை கொடுத்துதீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

		மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், புனர்வாழ்வுப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமையினால் குறித்த பணத்தை விடுவிக்க முடியாது என வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.	

3.3 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பனியின் முன்னாள் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மக்கள் தொடர்பு) 2019 மே 16 ஆம் திகதி முதல் பதவி வறிதாக்கியவர் ஆக கருதி பணியில் இருந்து விலக்கப்பட்டமை காரணமாக அவ்வலுவலா் கம்பனிக்கு எதிராக கொழும்பு தொழில் நியாயசபையில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அவ்வழக்கு தீர்ப்பின் பிரகாரம் உரிய அலுவலரின் சேவையை முடிவுறுத்தல் நியாயமற்றது என தொழில் நியாயசபை முடிவு செய்ததுடன், அதன் நிமித்தம் அவ்வலுவலருக்கு ரூபா 1,521,000 உம் சட்டக் கட்டணமாக ரூபா 405,000 உம் கம்பனியால் செலுத்தப்பட்டன. கம்பனியின் மோசமான மனிதவள முகாமைத்துவம் காரணமாக கம்பனிக்கு ரூபா 1,926,000 பயனற்று கம்பனி உறவேண்டியிருந்தது.	பிரதம நிறைவேற்று அதிகாரி, இந்த அலுவலரை நிறுவனத்தின் சேவை தேவைப்பாடு எனக் காரணம் காட்டி, 2019 மார்ச் 11ஆம் திகதி முதல் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள 28 ஆவது மைல்கல் கருத்திட்டத்திற்கு இடமாற்றினார். நியாயமான காரணங்களைக் கூறி அவ் இடமாற்றத்தை இரத்து செய்யக் கோரப்பட்டிருந்தாலும், உரிய கோரிக்கை நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தினால் பரிசீலிக்கப்படவில்லை. நிறுவனம் இடமாற்றம் தொடர்பாக பல நினைவூட்டல்களை அனுப்பியிருந்த போதிலும், அவர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சமுகமளிகாமையினால் அவர் பதவியை வறிதாக்கினராகக் கருதப்பட்டார். தொழில் சட்டதிட்டங்களைக் கருத்தில் கொள்ளாமல் இடமாற்றங்கள் மற்றும் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டமையினால், இந்த முடிவுகளுடன் எந்த தொடர்பும் இல்லாத மனித வளப் பிரிவுக்கு பின்னரான வழக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராக	நிறுவனத்தின் மோசமான மனிதவள முகாமைத்துவத்தினால் ஏற்பட்ட இந்த பயனற்ற செலவினத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பு கூற வேண்டியமையினால் அதற்காக அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			வேண்டியிருந்தது.
(ஆ)	2023 ஒக்டோபர் 09ஆம் திகதி முதல் செல்லுபடியாகும் வகையில் 35 அலுவலர்கள் கம்பனியினால் உறுதிப்படுத்தப்பட்டனர். இங்கு அனைத்து உள்ளக ஊழியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நேர்முகப் பரீட்சை சபையினால் அவற்றை மதிப்பீடுக்கு உட்படுத்தி பொருத்தமான விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை முறையாக நடத்தப்பட்டது எனவும், நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டனர் எனவும் குறிப்பிட்டு 2023 செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற 182ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றிருந்தது.	2023ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ஊழியர்களை உறுதிப்படுத்தப்படுத்துதல் தொடர்பாக சூழல் அமைச்சின் புலனாய்வுப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நியமிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அதிகாரிகள் அடங்கிய குழுவின் அறிக்கைகளின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளை வினவி 194ஆவது பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	அலுவலர்களை உறுதிப்படுத்தல் உரிய முறையின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 வருடாந்த செயல் திட்டம் மற்றும் செயலாற்றுகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புவிச்சரிதவியல் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட சூழல் ஆய்வுகள் மற்றும் பிற புவிச்சரிதவியல் கருத்திட்டங்கள் பொருட்டு முறையே 23 சதவீதம் மற்றும் 42 சதவீதம் என்ற குறைந்த செயலாற்றுகை நிலையை அடைந்துள்ளது.	செயலாற்றுகை அறிக்கையின் முன்னேற்றம் குறைவடையும் அல்லது பூச்சியமாவதற்கான பொறுப்பு தொடர்புடைய பிரிவுத் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.	எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைவதற்கு வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் செயல் திட்டம் பொருட்டு கம்பனியின் மனிதவளப் பிரிவு, சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவு, பெறுகை மற்றும் களஞ்சியப் பிரிவு, சட்டப் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றின் செயல்பாடுகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	வருவாய் ஈட்டாத பிரிவுகளைச் சேர்க்க வேண்டுமென எமக்கு அறிவுறுத்தப்படவில்லை. இதைச் சரிசெய்வதற்காக செயல் திட்டங்களை வழங்குமாறு உரிய பிரிவுகளை கோரியுள்ளோம். அதனை எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.	நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளின் வகிபங்குகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.